

அமரர்

# செல்வி. கிஷோபிதா தேவனேஸ்வரன்

அவர்களின்

# சிவபதப்பேறு குறித்த்

# நினைவு மலர்

09.07.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# செல்வி. கிஷோபிதா தேவனேஸ்வரன்

(மாணவி தி/ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரி)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 2001.07.19 | 2014.06.10 |

## திதிவெண்பா

"சீர் பெருகு ஜெயவருட வைகாசியில்
தீராத துவாதசித் திதிதனில் - பேறாரு
பெற்ற செல்வி. கிஷோபிதா தேவனேஸ்வரன்
பூர்வபட்சமதில் ஈசனடி ஏகினைக் காண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பு மகளாக வந்துதித்து
தெய்வக் குழந்தையாய் மடியினில்
தவழ்ந்து மார்பினில் புரண்டு
கல்விச் செல்வத்தில் மூழ்கி
ஆயகலைகளில் ஆடல் கலைதனை கற்றுத்தேறி
மண்ணில் மகிழ்ந்து
பாசமாய், பண்பாய்
வாழ்ந்தும், வந்ததோ
மாறாத வடுவொன்றாய்
இதயமதில் பதிந்தும் போனீரே
அன்பு மகளே!
இச்சிறு நினைவு நூலினை
சமர்ப்பணமாய் தந்தோமே
விழியோடும் நீரோடு.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயலார் புனல் செல்வம் மல்கு
சீர்கொள் செங்காட்டம் குடி அதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தி ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்வதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய் தான் தவிர்ந்து உனைப்போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா


இடர்கெடுத்து என்னை ஆண்டு கொண்டு என்உள்
இருட்பிழம்பு அற எறிந்து எழுந்து
சுடர் மணி விளக்கின் உள் ஒளி விளங்கும்
தூய நற் சோதியுள் சோதி
அடல் விடைப்பாகா அம்பலக்கூத்தா
அயனொடு மால் அறியாமைப்
படர் ஒளி பரம்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய் அடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்கு ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவு
இல்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியாய் ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர - எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முற்பத்து முவர்க்கத் தமரரு - மடி பேணப்
பத்துத் தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொரு தொரு
பட்டப் பகல் வட்டத்திகிரியி - லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத் தொடு ரட்சித் தருவது - மொருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு - கழுகாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப்பவுரிக்குத் திரிகட - என வோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகு குகு
குத்திப்புதை புக்குப் பிடி யென - முதுகூகை
கொட்புற்றெழ நட்புற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல - பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுருக்கம்

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை தனில்
மடத்தடி மாரியம்மன் காலடி மண்ணில்
தேவனேஸ்வரன் நிர்மலா வின்
பாசமதில் உருவாகி
மடிதனில் தவழ்ந்தார்

பத்தொன்பது ஏழு இரண்டாயிரத் தொன்றில்
ஜனனம் நிகழ பாசமிகு
அண்ணன்மார் தனுராஜ், பவிராஜ்,
டிரூஸ்ராஜின் அன்புத் தங்கையாய்
நடை பயின்றார்.
கல்வி தான் திருகோணமலை
தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி தனில்
பயின்று, புலமைப் பரிசில் பரீட்சையில்
177 புள்ளிகளும் பெற்றாரே
ஆங்கில புலமையிலும் சிறந்து விளங்கி
திருமதி.ஜெ.பாலச்சந்திரனின்
மாணவியாய், British Arts Festivals Association
நடாத்திய போட்டிகளில்
வருடத்திற்கு இரண்டு வெற்றி கிண்ணங்களும் பெற்றார்.

திருமதி. ரேணுகா செல்வபுத்திரனின்
இராஜரட்ணம் நடனாலயத்தில்
பரதம் கற்றுத் தேறி, காண்போர்
வியக்கும் பெண்ணாய்
பூத்திட்ட புன்னகை மாறாத
இளம் நங்கையாய்
அன்ன நடை பயில உற்றவர்
பெற்றவர் காண
தேவ கன்னிகையானாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணர் இயக்கத்தில் சேர்ந்து
சமூகமெனும் பொறுப்புணர்ந்து
கிடைத்தற் கரிய மானுட வாழ்வின்
சிறப்பறிந்து நேர்மை, பொறுமை
போன்ற பண்பறிந்து
கீழ்ப்படிந்த நல்லொழுக்கத்தோடு
சிறப்புற வாழ்ந்திருந்தாரே....

மாறாத வடுவாய் காலனும்
நோயாய் ஏன் தான் வந்தானோ
பாசக்கயிறும், பாவமாய் அவனுக்கு
தோன்றவும் இல்லையோ...
நேரமும் காலமும் வந்து கூடியதோ
நாம் எதிர்த்தும் என்ன பயன்?
மானுடம் வெல்லுமோ மரணத்தை?
நாமும் அழுதோம் சுற்றமும்
கூடியழுதனரே....
வேறென்ன நாம் செய்ய.....?
நினைத்தோமே இன்நாளில்
ஈசனடி தொழுதோம் - உன்
ஆத்மா சாந்தி பெற......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் துயர்

அன்பு மகளே!
ஆறாத்துயரில் என்னை அழவிட்ட
அம்மணியே.....
ஆட்கொள்ளி நோயாலே அவதியுற்று சென்றாயே
அறிவிப்பு இல்லாமல் ஆண்டவன் உனை அழைத்தானோ
அறிகுறி காட்டாமல் அடங்கிப் போனாயே...
"அம்மாச்சி" என்றென்னை
அனுதினம் அழைப்பாயே...
என்னுயிர் பிரியும் வரை
உன் உரு என் விழிவிட்டு
அகலாதம்மா.....

**- அம்மா -**

# தந்தை குமுறல்

ஏக புதல்வியாய் வந்து
எனை ஆண்டாய் அம்மா
ஏங்க வைத்து விட்டு
எங்கு சென்று மறைந்தாயம்மா.
உன் கள்ளமில்லாச் சிரிப்பில் மயங்கி
காலன் உன்னை கவர்ந்து சென்றானோ
நான் மண்ணில் உள்ள வரை - உன்னை
மறக்க முடியாது அம்மா....
நல்ல மக்கள் நால்வர் என - நான்
நம்பி இருந்த போது
நட்டாற்றில் விட்டது போல் - உன்
நாடி நின்றதேனம்மா....
பட்டப்படிப்பு நீ படிப்பாய் என்றிருந்த வேளை
பள்ளிப் படிப்பினையே நீ பாதியிலே
விட்டதேனோ......?
சோடித்துப் பார்க்க நான் காத்திருந்தவேளை
என்னை சோகத்தில் ஆழ்த்தி விட்டு
சோதியில் மறைந்தாயோ அம்மா
உன்பிரிவால் துயருறும்.......

**- அப்பா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணன்மார் புலம்பல்

கிசோ என்றாலே கிட்ட வந்து நிற்பாயே
உன் அசரீரி ஓசை அனுதினம் கேட்குதம்மா....
பணிவிடைகள் செய்து - உன்னை
கண்மணி போல் காத்தோமே....
எம் கண்களையெல்லாம் மறைத்து
காலன் உனை கடத்திச் சென்றானோ....
சென்ற திசை தெரியாமல் தேடுகின்றோம்
செய்வதறியாது திகைக்கின்றோம்.
தங்கையல்ல நீ எமக்கு
தாயம்மா....
அண்ணன் இல்லை நாங்கள் - உன்
பிள்ளைகளம்மா....
மீண்டும் நீ எங்களுக்குள்
பிறப்பெடுக்க - மீண்டும் மீண்டும் இறைவனை
கேட்கின்றோமம்மா.....

அண்ணன்மார்
தனுராஜ், பவிராஜ், டிளுஷ்ராஜ்

# பெரியன்டி புலம்பல்

பெரியன்டி, பெரியன்டி - என
ஓடி வருவாயே கிஷோ
என்னைப் பெருந்துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றாய் கிஷோ
வெண்புறா போல தினமும்
காலையில் விடை பெறுவாய் - உன்
கள்ளமில்லாச் சிரிப்பை இனி
எங்கு காண்பேன்.
பெரியன்டி போய்ட்டு வாரேன் - என
சொல்லிச் செல்வாய் - இன்று
ஒன்றுமே சொல்லாமல்
எங்கு சென்றுவிட்டாய் கிஷோ
உன் நினைவால் துயருறும்....

பெரியன்டி
செல்வராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்மார் மாமிமார் புலம்பல்

அன்புச் செல்வமே - எமை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சென்றாயே அம்மா
மீளமுடியவில்லை - நீ
மீண்டு வரமாட்டாய்
என்ற துயரில் இருந்து

உன் தத்தி தவழ்ந்த நடை தொடங்கி
தளராது ஆடிய நடனம் வரை
கண்டு களித்த கண்களை இப்போது
கலங்க தவிக்க வைத்தாயே அம்மா....

உற்றாரும் சுற்றாரும் கூடியழ
உறவினரும் உன் பிரிவால் கதறியழ
பெற்றவர் மனத்தில் பேரிடியும் விழ
போகாத தேசம் போனாயோ அம்மா....

மாண்டவர் பூமியில் பிறப்பது
உசிதமெனில்
மீண்டும் எங்கள் மடிதனிலே - நீ
தவழ, வேண்டி நிற்கின்றோம்
இறைவனை

மாமாமார், மாமிமார்,
சித்திமார், சித்தப்பாமார்,
பெரியம்மாமார், பெரியப்பாமார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர சகோதரிகள் புலம்பல்

ஒரு கூட்டுப் பறவைகளாய்
ஒன்றாய் களித்திருந்தோமே
நீ மட்டும் சிறகு விரித்து
பறந்து போனதெங்கே
நீ பறந்த திசையறியாமல்
பதறி நிற்கிறோம்.

அழகு தேவதையே
அன்பான கிஷோ குட்டியே - உன்
அழகு முகம் காணாமல்
அழுது புலம்புகின்றோம்.

இனி எந்தப் பிறவியில் - நாம்
இதுபோல் உறவாடப் போகிறோம் - உன்
அபிநயப் பேச்சினை
இனி எந்த ஜென்மத்தில்
அனுபவிக்கப் போகிறோம்.

நாட்டியத் தாரகையே - உன்
நடனமாடிய பொற்பாதங்கள் - இனி
நடராஜரின் திருப்பாதங்களில்
இளைப்பாறட்டும்

உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்



அக்காமார்:
தர்மினி, சகானா, விதுர்ஷனா, லக்ஷினி
அண்ணாமார்:
சதீஸ்ராஜ், டிசாந், தரோசன், டிலக்ஷன், உதர்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தி புலம்பல்

சிறுகுழலி சொற்பொழிந்து
சிங்கார வதனம் கொண்டே
சித்தியிவளை நாடி வந்ததேனோ
காலம் சொன்ன மாயம் அறிந்து
காலன் கொள்ளையிட வருவதையறிந்து
சிலகாலம் என்னிடம் சீராடிட வந்தாயோ கிஷோ......
எப்படி மறப்பேனடி நான் உனை
ஏந்தி சிலமாதம் திரிந்ததை
என்றும் எண்ணி கதறியழுவா
செல்லமே..... எனை நாடினாய்!
உன் தங்கை ஓடி வருவாளே உன்னுடன் விளையாட
என் பிள்ளைக்கு இனி யாரடி தோழி!
கண்ணீர் விட்டு நாம் கதறியழ
காணாமல் போனதேன் என் செல்வமே......!

சித்தி ஜெகதீஸ்வரி (சஞ்சலா)

## தங்கை புலம்பல்

அக்கா............. கிஷோக்கா............
என்னை மறந்து சென்று விட்டாயோ?
சிறு பானை கொண்டு நாமும்
சிற்றன்னம் செய்தோமோ
ருசி பார்க்க ஆள் தேடி ஆளாய் பந்தோமோ
யாரிடம் செல்வேன் அக்கா நான் இனி
திரும்பும் இடமெல்லாம் நீ
திரிவதைப் போல் உள்ளதே
தீராதா என் ஏக்கம் கிஷோக்கா..........
உன் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை நாடும் என் குடும்பம்.

தங்கை
சஷ்மிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் தோழி புலம்பல்

இரட்டையர் போல் - நாம்
இருந்தோமே.... இன்று
நீ மட்டும் தனியே எங்கே
போனாய் கிஷோ

எதைச் செய்தாலும் இருவரும்
சேர்ந்தே செய்தோமே....
இனி நான் மட்டும் தனியே
என்ன செய்வேனடி

தங்கையல்ல நீ எனக்கு
தோழியடி.... என்னை
தவிக்க விட்டு விட்டு
சென்றதேனடி

அன்புள்ள அக்கா, ஆருயிர் தோழி
லக்ஷினி

# பெறாமகள் புலம்பல்

சித்தி என்று நான் செல்லமாக
அழைக்கு முன் - நீங்கள்
சிறகு விரித்து எங்கே
சென்றீர்கள்....?

சத்விகா என்று என்னை
செல்லமாக அழைப்பீர்களே - உங்கள்
சத்தத்தை இனி எங்கே
கேட்பேன்....

நடை பயில முன்னரே - என்னை
நடனம் பயிலச் சொன்னீர்களே
உங்கள் நடனத்தை இனி
எங்கே காண்பேன்.... கிஷோ சித்தி......

பெறாமகள்
சத்விகா சுதாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலிதா ஆசிரியர் புலம்பல்

அன்பு காட்டிய
அழகிய கிஷோபிதா!
உலகில் பிரிவு நிச்சயம் - இதை
உறுதிப் படுத்தவா இவ்வளவு அவசரம்? - என்
கலங்கும் உள்ளமதை தெளிவாக்க
காலம் எப்போது வருமம்மா?

இடைவேளையில் உன்தரிசனம்
இடையிடையே கிடைத்ததால்
இனியில்லை உனக்காபத்து என்றல்லோ
இன்புற்றேன் யான்.

இனிமையாகக் கதைத்து - என்
இன் சொல்லுக்கு அடிமையாவதாய் பதிலுரைத்து
இனி நாளை என்று விடை பெறும் போது மட்டும் - உன்
இரு விழிகளில் ஏன் கலக்கம்? - என
இன்று வரை புரியவில்லை விடை எனக்கு.

கழிந்த நாட்களில் ஒரு நாள் மட்டும்
கவலையுடன் ஏன் சாய்ந்தாய் என் தோளில்?
ஏன் வடித்தாய் உன் விழி நீரை?
காரணம் இதுவெனத் தெரிந்திருந்தால் - நொடியினில்
காரியம் ஆற்றிக் காப்பாற்றியிருப்பேனம்மா.

அன்புக் கிஷோபி!
அழகிய உருவில்
அடக்கமாய் இருந்து
அறிவுப் பசிக்குத் தீனி அதிகமாய் எடுத்து
அவனியில் பெற்றாய் புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு அகவை தான்
பாரினில் வாழ்வு என
பறைசாற்ற வந்த காலன்
பிடிபட்டால் எம் கையில்? - அவனை
துண்டு துண்டுகளாக்கி
துகள் துகளாய் உன்னடியில்
மன்றாடி மன்னிப்புக் கேட்க வைக்க
மனம் துடிக்குதம்மா.

பெற்றவள் படும்பாடு
கற்பித்தோர் கலங்கும் கலக்கம்
கூடிப் பகிர்ந்தோர் குமுறும் குமுறல்
உன் உறவினர் பதறும் வகை
சிறு வயதில் நீ பிரிந்ததால்
சிதறிய சிந்தனைகளை
சீராக்க முடியாதகாரணம் தானோ?

கிஷோபியம்மா!
இனி ஒரு மானிடப் பிறப்பு எடுத்தால்
இவ்வளவு திறனுடனும் மீண்டும் வந்து
இவ்வுலகில் சீருடன் வாழ்! அல்லது
இறைவனுக்கருகே இன்புற்றிரு - என
கலங்கிய விழிகளுடன்
கடவுளை வேண்டும்..... அன்பான....

ஆசிரியர் - லலிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடன ஆசிரியர் புலம்பல்

உயிர்த் துளியொன்று
இறையருட் கடலில்
சங்கமமாகி விட்டது.
பன்னிரண்டு ஆண்டுகள்
மண்ணிலிருந்து தவழ்ந்து
நடை பயின்று
எண் எழுத்துப் பயின்று
இறை தந்த நாட்டியக் கலை பயின்று
இன்று இறை பதம்
காணப் போயிற்று.
நடனம் அவள் உயிர்த்துடிப்பு
கண் அசைவும், வில்லான புருவ அசைவும்
கை அசைவும், ஜதியோடு காலசைவும்,
உயிரோடு இருந்திருந்தால்....
நடனத்தின் இலக்கணம்
சிஷ்யைக்கும் இலக்கணம் அவள் தான்....
குரு எனும் சொல் அவளுக்கு மந்திரம்
கணக்கு முடிந்தது....
வந்த இடம் சென்று விட்டாள்
பெற்றவர் மனம் அமைதி பெறட்டும்
இருக்கட்டும் அவள் இறை அடியில்

நடன ஆசிரியை
திருமதி. ரேணுகா செல்வபுத்திரன்
இராஜரெட்ணம் நடனாலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னக் குறும்புகள் செய்து அன்று நீ சிரிக்கவைத்தாய்! இன்று அழவும் வைத்தாய்!!

வண்ணக் கனவுகள் சுமந்தபடி
பாடசாலை வந்தாய் - உன்
எண்ணங்கள் யாவும் ஈடேறும் முன்னே
எங்கு சென்றாய்
சின்னக் குறும்புகள் செய்து அன்று
சிரிக்க வைத்தாய் - அதை
எண்ணி எண்ணியே நாமும் இன்று
அழவும் வைத்தாய்

படிப்பு மட்டுமே போது மென்று
இருந்தவள் அல்ல நீ
நடிப்பு நடனம் யாவும் கற்றும்
தெளிந்த கலைமகள் நீ
நடிப்பும் துறுதுறு பார்வையும் கொண்டு
திரிந்தவள் அல்லவா நீ
அடிப்படையால் உன் பெற்றோருக்கு வாய்த்த
அருந்தவச் செல்வமே நீ

இருவிழி நீரது ஆறெனப்பாய வேறொன்றும்
இயலவில்லை எமக்கு
ஒருபிடி மண்ணினை இட்டதும் இங்கு
முடிந்ததா கணக்கு?
அருகிருந்தும் ஆடலை ரசிக்க - ஆண்டவன்
அழைத்திட்டான் போலும்
அழுது புரண்டென்ன லாபம்
அட விதிப்படி சுழலுது ஞாலம்

ஆசிரியர்கள்
தி/ ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக மாணவிகள் புலம்பல்

உனது பிறந்த தினத்தில்
பார்க்க இருந்த எம்மை
உனது இறந்த தினத்தில்
ஏன் பார்க்க வைத்தாய்?
உயிர்பிரிந்து உடல் உள்ளது
இன்னும் சிறிது காலம்
உடலில் உயிர் இருந்திருந்தால்
என்ன?
பாராட்டையும் அன்பையும்
சேர்த்தாய்
பிறக்கும் போதே இறைவனிடம்
ஏன் ஆயுளை வேண்ட மறந்தாய்?

தாய்க்கு அன்புப் புதல்வியாய்
தந்தைக்கு ஆசை மகளாய்
நண்பிகளுக்கு உற்ற நண்பியாய்
பாடசாலைக்கு சிறந்த மாணவியாய்
தேசத்திற்கு உற்ற பிரஜையாய்
வரழ்ந்த நீ ஒரு நொடியில்
இவ்வுறவுகளை விட்டு
பிரிய ஏன் துணிந்தாய்

நீ நடந்து சென்ற பாதை
உன்னை காணாமல் துடிக்கிறது
உன் இனிய குரலைக் கேட்காது
எம் காதுகள் கதறுகிறது.
உன்னை பெற்ற தாய்
இன்று கலங்கி கிடக்க
சிறுவயதிலே சிட்டாய்
எம்மை விட்டு பிரிந்தது ஏன்?

சக மாணவிகள்
தரம் - 08 "C"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயலவர் புலம்பல்

அம்மா! கிஷோபிதா! திரு. திருமதி தேவனேஸ்வரன் நிர்மலா தம்பதிகளுக்கு ஏகபுதல்வியாய் பிறந்தாய் மூன்று சகோதரர்களுக்கு ஒரு தங்கையாய் எந்தவிதமான குறையுமின்றி. செல்லமகளாய். செல்வமகளாய் வளர்ந்தாய். படிப்பில் நடனத்தில் விளையாட்டில் கெட்டிக்காரியாய் திகழ்ந்தாய் இவ்வளவு திறமைகளையும் வஞ்சகமில்லாமல் வாரி வழங்கிய இறைவன் உன் ஆயுளை மட்டும் பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் ஏனம்மா மட்டுப்படுத்தி விட்டான். பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறை பூக்கும் குறிஞ்சி மலர் போல் பூத்த அபூர்வ மலரே! உண்மையில் இறைவன் கொடியவன் இறப்பு என்பது மானிடப் பிறவியின் சாபம் என்று சொல்லி மனதைத் தேற்றினாலும் கிஷோ உன் மரணத்தை எங்களால் ஜீரனிக்க முடியவில்லையே. கடவுள் தனக்கு விருப்பமான மலரைத்தான் தன்னிடத்தில் அழைத்துக் கொள்வான் என்று சொல்வார்கள். அந்த வகையில் இறைவனுக்கு உகந்த மலராகி விட்டாயே! உன் அன்பான பார்வையும். அடக்க குணத்தையும். அழகான உருவத்தையும் நாங்கள் இனி எப்போது காணப்போகின்றோம். பள்ளிச் சீருடையில் வெண்புறாபோல் காட்சியளிப்பாய். எங்கு பார்த்தாலும் உன் பிம்பம். கனவிலாவது உன் தரிசனத்தைக் காட்டமாட்டாயா? கிஷோ. ஒவ்வொரு தேர்த்திருவிழாவின் போதும் உன் நடனத்தைக் காண ஆவலோடு இருப்போம். மண்ணுலகில் நடனமாடி மக்களை மகிழ்வித்தது போதும் என்று எண்ணி விண்ணுலகம் சென்று விட்டாயா கிஷோ!

திரும்பும் திசையெங்கும் உன்முகம் நிழலாட
நெஞ்சிலே நெருப்புப் போல் உன் நினைவுகள்
நெருட காத்திருப்போம் ஜென்மங்கள் பல

சி. பொன்னம்மா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவுக்கரசியே நானிலம் விட்டுச் சென்றதும் ஏனோ?

அகிலம் போற்ற வாழ்ந்த அழகு மலரே!
அகவை பதின்மூன்றுக்குள் அணைந்த தீபமானேயே
அரும்பு மலராகு முன்பே கருகியதேயம்மா
அனலில் இட்ட மெழுகாய் உருகினோமே.

சின்னஞ் சிறுவயத்தில் உன் சிங்கார நடனம் கண்டு
இன்புற்று வியந்த நாம் நாளை
நடன தாரகையாய் ஒளிர்வாய் என நினைத்தோம்
கடந்து போன கனவாய் போனதேயம்மா

தவமிருந்து பெற்ற தவக்கொழுந்தே - உன்
தாய் கண் பெற்று கண் இழந்தவர் போல் ஆனாரே
உன் ஆசை முகம் காண துடிக்கிறாரே
உயிர் பெற்று மீண்டு வாராயோ கண்ணே!

தொலைபேசியிலும் உன்குரல் தேனாய் இனிக்குமம்மா
துள்ளும் நடையில் சுற்றிவருவாயே அன்னையின் பின்னால்
அம்மாவின் நண்பிகள் உனக்கும் நண்பிகள் தானே!
ஆண்டவன் உன்னை அவசரமாய் அழைத்துவிட்டாரே!

தமிழ் ஆங்கில மொழிப் போட்டிகளில் நீபெற்ற
வெற்றிக் கிண்ணங்கள் தான் எத்தனை
நாமகள் தான் உன் நாவில் குடியிருந்தாளோ
நாவுக்கரசியே நானிலம் விட்டுச்சென்றதும் ஏனோ?

ஆசை அப்பா பரிதவிக்க பாச அம்மா துடிதுடிக்க
அன்பு அண்ணாக்கள் கலங்கி நிற்க எங்கே சென்றாய்
காலன் நோய் உருவில் வந்து வீற்றிருந்தானா?
கண் இமைக்கு முன்னே கவர்ந்து சென்றானே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

முருகாபுரி மகளிர் அபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்துள் தெய்வமான கிஷோபிதா...

செல்வி. தே. கிஷோபிதா (கிஷோ) என்றென்றும் எம்மால் மறக்க முடியாதவராவார். குறிப்பாக அன்புச் செல்வம் கிஷோ அவர்களது தாயார் திருமதி. தே. நிர்மலா அவர்கள் தி.மா. இளைஞர் அபிவிருத்தி "அகம்" தி.மா.பெண்கள் வலையமைப்பு ஆகிய எம் அமைப்புக்களில் கடந்த சில ஆண்டுகளாக உறுப்பினராகவும், தொண்டராகவும் இருந்து பல்வேறுபட்ட பெண்கள் நலன் மற்றும் சமூக அபிவிருத்தி சார்ந்த பணிகளை செய்து வந்தார்.

விசேடமாக பெண்கள் ஊக்குவிப்பு, ஆற்றுப்படுத்தல் சம்பந்தமான பணிகளை இவர் ஆற்றிய சந்தர்ப்பங்களில் இவரது மகளான கிஷோவை அவரது இல்லத்திலும், எமது அலுவலகத்திலும் பல சமயம் சந்திக்கக்கூடியதாக இருந்தது. அன்பும், அழகும் ஒரு சேர்ந்த முகமும், துள்ளலும், துடிதுடிப்பும் சேர்ந்த தோற்றமும் இன்றும் எம்மால் மறக்க முடியாதது ஆகும். மேலும் கிஷோவுக்கு இருந்த குறித்த சுகவீனம் தொடர்பாக நாம் அறிந்த அத்தருணங்கள் மிகவும் கவலை மிகுந்தவையாகும்.

ஆனாலும் கிஷோவின் தாயாரான திருமதி நிர்மலா அவர்கள் மிகவும் பாராட்டத்தக்கவர்கள். சமூக விடயங்களில் ஈடுபட்ட போதிலும், மகளின் உடல் நலன், பராமரிப்பு தொடர்பாகவும் கவனஞ் செலுத்த தவறவில்லை. குறிப்பாக தனது தவப்புதல்வியின் உடல்நிலை ஒரு கட்டத்துக்குப் பிறகு அதிகம் கவனிக்க வேண்டுமென்ற நிலை வந்த பின் சமூகப்பணி சார்ந்த வெளி விடயங்களை குறைத்து தனது மகளுக்காக தன்னை அர்ப்பணிக்கவும் அவர் தவறவில்லை.

இருந்த போதிலும் காலத்தின் விதியோ, காலனின் பகையோ கிஷோ இம் மண்ணுலகு விட்டு பிரிந்தமை எம் எல்லோருக்குமே வேதனைச்சுமையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கிஷோவின் தாயாரது ஆற்றொனா துயர் கண்டு நாமும் பெரும் கவலை அடைகின்றோம்.

எனினும் பிள்ளைச் செல்வங்கள் தெய்வத்துக்கு சமமானவர்கள். அதிலும் அமரத்துவம் அடைந்த பிள்ளைகள் தெய்வ நிலை அடைந்தவராவர் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமானதாகும். எனவே இந்த சந்தர்ப்பத்தில் கிஷோ இறையிடம் அடைய மேலும் நாம் இறைவனை பிரார்த்தித்து, வேண்டிக்கொள்கின்றோம்.!

"பூ மகளே நீ புகழிடம் சேர்வாய்...
புன்னகையே நீ இறையிடம் அடைவாய்....
ஆனந்த வெண்ணிலவே உன் அழகின் சிரிப்பொலி
இவ் உலகில் என்றும் நிறைந்திருக்கும்!
வாழும் காவியமே... உன் வாழ்க்கைக் காலங்கள்
ஓவியமாய் இங்கே செதுக்கப்பட்டு விட்டது."

இவ்வண்ணம்
தி.மா.இளைஞர் அபிவிருத்தி "அகம்" மற்றும்
தி.மா.பெண்கள் வலையமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலரோகம் / நீரழிவு நோயும் (Diabetes Mellitus) அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளும்

உடலின் இன்சுலின் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டு குளுக்கோஸ் அனுசேபத்தில் ஏற்படும் குறைபாடு காரணமாக சலரோகம் ஏற்படுகிறது.

**நோயின் அறிகுறிகள்**

* அதிகரித்த தாகம்
* அசாதாரண பசி
* கண்பார்வை மங்குதல்
* புண்கள் ஆறும் தன்மை குறைதல்
* அடிக்கடி சிறுநீர் கழித்தல் (குறிப்பாக இரவில்)
* அவயவங்களில் விறைப்புத் தன்மை ஏற்படல்

**சலரோகத்தை கட்டுப்படுத்தா விடில் அது பின்வருவனவற்றைப் பாதிக்கும்**

* இருதயம்
* சிறுநீரகம்
* கண்
* மூளை
* நரம்பு
* குருதிச்சுற்றோட்டம்
* நோய் எதிர்ப்புத் தன்மை
* புண்கள் ஆறும் தன்மை

**சலரோகத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள்**

1. உணவுக்கட்டுப்பாடு
2. குளிசை
3. இன்சுலின் ஊசி

**முற்றாக தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள்**

* சீனி
* சக்கரை
* ஜாம்
* தேன்
* கேக்
* சொக்கலேற்
* இனிப்பு வகை
* குளிர்பானம்
* குளுக்கோஸ்
* பனாங்கட்டி
* பழரசம்
* இனிப்பூட்டிய பானம்
* மாச்சத்து கூடிய உணவு வகைகளையும் கிழங்கு வகைகளையும் குறைத்து விடுதல் நன்று.
* பால் - சீனி இல்லாமல் அருந்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரும்பி அளவில் உண்ணக்கூடிய உணவுகள்**

* தெளிந்த சூப்
* மரக்கறி சலட்
* அச்சாறு
* கோப்பி
* முட்டைக்கோவா
* மிளகுத்தூள்
* தக்காளி
* கெக்கரி
* எலுமிச்சை
* முள்ளங்கி
* சீனி சேர்க்காத தேனீர்
* லீக்ஸ்
* இலைக்கோவா
* வெண்டி
* கீரைவகை
* வெங்காயம்

மரக்கறி, இலைக்கறி வகை, பருப்பு, மீன், முட்டை, இறைச்சி, குரக்கன், கடலை என்பவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

**சலரோக நோயாளி இரண்டு முக்கிய காரணங்களால் மயக்கமடைகிறார்.**

1. உணவை ஒழுங்காகச் சாப்பிடாது இன்சுலின் ஊசியை அல்லது மாத்திரையை எடுப்பதால் குருதியில் சீனிச்சத்து குறைதல்.
2. இன்சுலின் ஊசியை அல்லது மாத்திரையை ஒழுங்காக எடுக்காததால் குருதியில் சீனிச் சத்துக் கூடுதல்.

இவ்விரண்டையும் உடனடியாக வேறு பிரித்துக் காண்பது கடினம் என்பதால், முதலுதவியாக சீனி அல்லது குளுக்கோஸ் கொடுக்கலாம். நோயாளி வாயால் விழுங்கக் கூடிய நிலையில் இருப்பின் மட்டுமே இவற்றைக் கொடுக்கலாம். இல்லையெனில் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும். சலரோக நோயாளிக்கு புண்கள் ஏற்படும் போது அது மாறுவதற்கு மிக நீண்ட நாட்கள் செல்லும்.

**இதற்கு காரணம்**

1. நரம்புகள் பாதிக்கப்பட்டிருப்பதால் உணர்ச்சியின்மை.
2. குருதிச் சுற்றோட்டம் பாதிப்பு.
3. புண் மாறும் தன்மை குறைவு.
4. நோய்க்கிருமிகள் பல்கிப் பெருகும் வாய்ப்புக்கள் அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதனால் இரண்டு முக்கிய பாதிப்புக்கள் ஏற்படும்**

1. சலரோகத்தைக் கட்டுப்படுத்துவது கடினம்.
2. புண்களில் இருந்து தொற்று பரவுவதால் அவயவங்களை அகற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

**இவற்றைத் தவிர்க்க**

1. தினமும் பாதங்களைக் கவனமாக அவதானித்து இளஞ்சூடுநீர் சவர்க்காரத்தால் கழுவி மென்மையான துணியால் துடைக்கவும்.
2. சிறிய புண்ணாயிருப்பினும் வைத்தியரிடம் காட்டவும்.
3. நகம் வெட்டும் போது கவனமாக இருக்கவும்.
4. வெறுங்காலுடன் நடப்பதை தடுக்கவும்.
5. எப்போதும் கால்களுக்கு அளவான தடிப்பான, கால்களில் இருந்து கழன்று விழாத வாறு அமைக்கப்பட்ட பாதணிகளை அணியவும்.
6. புகைபிடிக்கப்கூடாது.

**முக்கிய குறிப்புகள்**

1. ஒவ்வொரு மாதமும் செய்ய வேண்டியது
   * உடல் நிறை
   * குருதி அமுக்கம்
   * குருதியில் குளுக்கோசின் அளவு
   * தவறாது வைத்தியப் பரிசோதனைக்குச் செல்லுதல்

2. 03 மாதத்திற்கொருமுறை செய்ய வேண்டியது.
   * குருதியில் கொழுப்பின் அளவுப் பரிசோதனை
   * சலப்பரிசோதனை (முழுமையான)

3. ஒவ்வொரு வருடமும் செய்ய வேண்டியது.
   * முழு உடற்பயிற்சி பரிசோதனை
   * ஒவ்வொரு நாளும் சலத்திலுள்ள குளுக்கோசின் அளவை வீட்டில் பரிசோதித்துப் பார்க்கவும்.

குறிப்பு: இன்சுலினைச் சேமிக்கும் போது குளிர்சாதனப் பெட்டியின் நடுப்பகுதியில் வைத்து சேமித்தல் சிறந்தது. மேற்பகுதியில் (Defreezer) வைத்துச் சேமிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய்

ஒருவருக்கு நீரிழிவு தோன்றியுள்ளது என்றால், அதை அவர் தாமாகவே தெரிந்து கொள்ளக் கூடிய அடையாள அறிகுறிகள் பின்வருமாறு:

- ✯ அடிக்கடி சிறுநீர் கழியும். அதன் அளவும் வழக்கத்திற்கு மாறாக அதிகமாக இருக்கும். நீரிழிவு முற்றியவர்கள் ஒன்றுக்கு 12 லீற்றர்கள் வரை சிறுநீர் கழிப்பார்கள்.
- ✯ அடிக்கடி சிறுநீர் கழிவதால் அடிக்கடி தண்ணீர் அருந்த வேண்டி வரும். தாகவேட்கை அதிகமாவதால் வழக்கமாக குடித்து வரும் தண்ணீரை விட அதிகளவு தண்ணீரைப் பருக வேண்டி வரும்.
- ✯ உடம்பின் எடை விரைவில் குறைந்து விடும். நாளுக்கு நாள் உடல் மெலிவடையும்.
- ✯ வழக்கத்திற்கு மாறாக பசியெடுக்கும் பசித்தவுடனேயே உணவு அருந்த நேரிடும். காலைச் சிற்றுண்டியைக் கூட வெகு விரைவில் அருந்த விரும்புவர். இதனாலேயே குடும்பத்தில் தகராறுகள் ஏற்படுவதுண்டு.
- ✯ நோயாளிக்கும் அடிக்கடி கோபம் உண்டாகும். வீட்டில் வரைக் கவனிப்பவரும் பொறுமைக்குச் சோதனை ஏற்படும்.
- ✯ எப்போதும் களைப்பும் சோர்மாக இருக்கும் கை, கால்கள் அசதியாகவும் சோம்பலாக வும் இருக்கும்.
- ✯ அடிக்கடி தூக்கம் வரும்.
- ✯ இனிப்பு சுவை மீது நாட்டமும் விருப்பமும் அதிகமாகும்.
- ✯ இரவில் அடிக்கடி எழுந்து சிறுநீர் கழிக்கச் செல்ல நேரிடும் இதனால் தூக்கம் கெடும்.
- ✯ சிறுநீர்த் தசைகளில் தோலிலும் அரிப்பும் நடைச்சலும் உண்டாகும்.
- ✯ கண்பார்வை மங்கும். உடலில் கட்டிகள், பிளவுகள் போன்றவை தோன்றும்.
- ✯ உடலில் எந்த பகுதியிலாவது காயம் பட்டாலும், புண் ஏற்பட்டாலும் அது எளிதில் ஆறாது.
- ✯ நாளடைவில் உடலில் திசுக்கள் இற்றுப் போயிடும்.

நீரழிவு என்பது ஒரு கொடிய நோயல்ல. என்றாலும் மிகவும் சிக்கலானது அதன் நுணுக்கங்களை நோயாளி தானாகவே தெரிந்து கொள்வது எளிதல்ல. எனவே நீரிழிவு ஆரம்பித்து விட்டதா இல்லையா என்பதைத் திறமை வாய்ந்த வைத்தியர் ஒருவர் தான் உறுதியாகச் சொல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரிழிவு நோயை நீக்க நோயாளி செய்யவேண்டிய பயிற்சிகள்**

* காலையில் 4 மணிக்கு எழுந்து காலை கடன்களை முடித்து யோகாசனத்தையோ சூரிய நமஸ்காரத்தை செய்ய வேண்டும்.
* இரவு பத்து மணிக்கு எல்லாம் படுக்கைக்கு சென்று விட வேண்டும்.
* மூன்று நாள் குடித்த மோர் ஆனாலும் வெயில் காலத்தில் தாகம் எடுக்கும் போது எல்லாம் குடித்து வரலாம்.

**கீழ் காணும் பழங்களையும் மற்றும் பொருட்களையும் தேவைப்படுமானால் பயன்படுத்திக் கொள்ளலாம்.**

மாதுழம்பழம், நாவற் பழம், மலைவாழை, மாங்குஸ்தான், விளாம்பழம், திராட்சை, புதினா, இஞ்சி, மா வடு, பச்சை கொத்துமல்லி, எலுமிச்சை, சுக்கு, வெங்காயம், வெந்தயம், கசகசா, கேள்வரகு, கோதுமை, புழுங்கலரிசி, வாழைப்பூ, அரக்காய் பிஞ்சு, பூண்டு, பசு மோர், காட்டு தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புச் செல்வம்

இறையடியுற்ற வேளை – எம்

ஆறாத் துயரில் பங்கு கொண்டு

எம்மைத் தேற்றியவர்கள்

இறுதி கிரியைகளிலும் எம் இதய தீபத்தின்

இறுதிப் பயணத்திலும் கலந்து கொண்டவர்கள்

உள்ளூர், வெளியூர்களிலிருந்து தொலைபேசி மூலம்

எம் துயர் பகிர்ந்து கொண்டவர்கள்

வலைத்தளங்கள், அஞ்சலிப் பிரசுரங்கள்,

மலர் வளையங்கள் மூலம் அனுதாபங்களை தெரிவித்தவர்கள்

இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டு


எம் தவப்புதல்வியின் ஆத்ம சாந்திக்காக

பிரார்த்தித்தவர்கள், இம் மலரிற்கான ஆக்கங்களை தந்தவர்கள்,

இம்மலரை தொகுத்து தந்த திரு. திருமலை சுந்தா அவர்களுக்கும்

அழகுற அச்சிட உதவிய அச்சகத்தினர் அனைவருக்கும் எமது

உள்ளம் கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.




இல. 05, விகாரை வீதி,<br>திருக்காணமலை.<br>தொ.பே. 076 694704

இங்ஙனம்<br>குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச

சிவசோதி

- தங்கேஸ்வரி + நவரட்ணசாமி
- போகீஸ்வரன்
- தவமணிதேவி (அமரர்) + யோகராசா

நாகராசா + இராசப

- விநாயகம்பிள்ளை + பங்கயச்செல்வி
  - பிர்ஜிதா
  - அஜிர்தா
  - துஜிர்தன்
- செல்வராணி + தவனேசன்
  - சகானா
  - டிசாத்
- சுலோசனா + சித்திவேல்
  - சதீஸ்ராஜ்
  - விதுர்ஷனா
  - தரோசன்
- ஈஸ்வரி + ரகுநாதன்
  - தர்மினி + சுதாகர்- சத்
  - டிலக்ஷன்
  - லக்ஷினி
- அமரர் பிரபாக

- தனுராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

ி + பாக்கியம்

இராமனீஸ்வரி
+
இராமநாதன்

- → ஜெயரூபி + சதீஸ் - சாதானா, நிவாசன்
- → கோபிதா + ஜெயகணேஷ்
- → தர்சிகா
- → நிருபாலன்

புவனேஸ்வரன்
+
விமலாங்க சுந்தரகுமாரி

**தேவனேஸ்வரன்**

சமணி

ாகரன்

பாஸ்கரன்
+
ஜெயலட்சுமி
↓
கோபிதா

த்விகா

**நிர்மலா**

ஜெகதீஸ்வரி
+
கமலநாதன்

- → உதர்ஷன்
- → சஷ்மிதா

உருத்திரகுமார்
+
பாமினி

**பவிராஜ்** **டிரூஸ்ராஜ்** **கிஷோபிதா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on.

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



SS Digital's
SSD K009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org